மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி.

**OS No.27/2024**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் திருமதி. S.தனலட்சுமி Gr -III Bench Clerk என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : செல்வம் ( பி.வா.சா.2)<br>க/பெ.<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

**23.01.2026**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:-**

1. தாவா சொத்து எனக்கு எனது அப்பா வழியில் வந்த பூர்வீக சொத்து என்றால் சரிதான். எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் எனது அப்பாவையும் சேர்த்து மொத்தம் 3 நபர்கள் ஆவார்கள். தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதால் எனது அப்பாவுடன் உடன் பிறந்த மற்ற நபர்களுக்கும் பங்கு உள்ளது என்றால் பங்கு பிரிக்கப்பட்டு எனது பங்கு எனக்கு கொடுக்கப்பட்டுள்ளது. எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட பங்கிற்கு ஆவணம் எதுவும் தயார் செய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது அந்த காலத்திலேயே பங்கை பிரித்துவிட்டார்கள். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராதையும், பதிலுரையையும் நான் படித்து பார்த்தேனா என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. எனது அப்பாவுடன் பிறந்த வெள்ளைச்சாமி தேவரின் மகன் சுப்பையா தேவர் என்றால் சரிதான். சுப்பையா தேவர் என்பவர் தற்போது தாவா கிராமத்தில் தலையாரியாக உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு விபரம் தெரிந்த வரை அவர் தலையாரியாக இல்லை. சுப்பையா தேவர் என்பவர் தாவா கிராமத்தில் தலையாரியாக இருந்தார் என்பதால் அவரது பணியை பயன்படுத்தி மோசடியாக எங்களது பெயரை பட்டாவில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல, எனக்கு தெரிந்தவரை சுப்பையா தேவர் தலையாரியாக வேலை பார்த்ததில்லை.

2. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் எனக்கு சரியாக படிக்க தெரியாது ஆனால் படித்து

காண்பித்திருப்பார்கள் கையொப்பம் செய்திருப்பேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் உள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிர் வழக்குரையில் உள்ள 11 பாராவில் எதிரிடை அனுபவத்தின் மூலம் எங்களுக்கு சொத்து பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிடை அனுபவம் 1 ம் பிரதிவாதிக்கு மட்டும் தான் கிடைக்ககூடியது என்றும், எனக்கு எதிரிடை அனுபவம் கிடைக்காது என்பதால் 1 ம் பிரதிவாதியிடம் இருந்து எனக்கு எந்த சொத்து பாத்தியம் கிடையாது என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் எதிரிடை அனுபவத்தில் மூலம் தான் 1 ம் பிரதிவாதிக்கு சொத்து பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், 2 , 3 ம் பிரதிவாதிகளிடமிருந்து 1 ம் பிரதிவாதியை சொத்தை கிரையம் பெற்றதால் பாத்தியம் இல்லையென்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதியே எனக்கும், 2 ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்தில் எவ்வித உரிமை இல்லையென்று குறிப்பிட்டுள்ளார் என்றும், அதை ஏற்று கொண்டு நான் எதிர் வழக்குரையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, எங்களது அப்பா காலத்தில் இருந்து நாங்கள் தான் விவசாயம் செய்து வருகிறோம், தற்போது வரை எந்த பிரச்சனையும் இல்லை. எங்களது அப்பா காலத்தில் இருந்து நாங்கள் தான் விவசாயம் செய்து வருகிறோம் என்பதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை வாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எங்களுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல. நானும், 2 ம் பிரதிவாதியும் சேர்ந்து 1 ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்றும், அதன் மூலம் எந்த வித பாத்தியமும் அமையாது என்றாலும் சரியல்ல. வாதிகளின் கோரிக்கை படி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.